ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 2153/19 - 2019 දෙසැම්බර් මස 13 වැනි සිකුරාදා - 2019.12.13

*2153/19 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.பி. 21/78 (xiv)

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

20 (4) (ஆ) ஆம் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 20 (4) (ஆ) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சர் பந்துல குணவர்த்தன ஆகிய நான், இக்கட்டளை மூலம் -

(அ) கட்புல மற்றும் அரங்கேற்றக் கலைக்கான பல்கலைக்கழகத்தின் நிர்வாகம் பாரதூரமான முறையில் சீர்குலைந்துள்ளதெனவும் சொல்லப்பட்ட பல்கலைக்கழகத்தின் அதிகாரிகள் வழமையான நிலைமைகளை மீள நிலை நாட்டுவதற்குத் தவறியுள்ளரெனவும் திருப்திப்படுவதன் மேல், சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையின், கட்டளைச் சட்டத்தின், நியதிச் சட்டத்தின், துணை விதியின், ஒழுங்குவிதியின் அல்லது விதியின் கீழ் கட்புல மற்றும் அரங்கேற்றக் கலைக்கான பல்கலைக்கழகத்தின் துணைவேந்தருக்கு அளிக்கப்பட்டுள்ள அல்லது அவர் மீது சுமத்தப்பட்டுள்ள அல்லது அவருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ள முறையே ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகிக்கும், புரியும் அல்லது நிறைவேற்றும் நோக்கத்திற்காக, கட்புல மற்றும் அரங்கேற்றக் கலைக்கான பல்கலைக்கழகத்தின் சொல்லப்ப்பட்ட துணைவேந்தருக்குப் பதிலாகத் தகுதிவாய்ந்த அதிகாரியாக இருப்பதற்கு ஓய்வுபெற்ற பேராசிரியர் வீரக்கோன் முதியன்செலாகே அபயரத்ன பண்டார அவர்களை 2019, திசெம்பர் மாதம் 13 ஆந் திகதியிலிருந்து நியமிக்கின்றேன்; அத்துடன்

(ஆ) பிரிவு 20 (4) (ஆ) ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டதும் 2019, செத்தெம்பர் மாதம் 24 ஆந் திகதிய 2142/ 25 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளையை ஒழிக்கின்றேன்.

பந்துல குணவர்த்தன,
உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சர்.

கொழும்பு,
2019, திசெம்பர் 13.

12-919

1A - PG 4822— 518 (2019/12) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.